

Lifeline மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

Vol 1 - No 33 Pages 4 Sunday, 05 Ocotber 2008 Free Copy

வன்னியில் மனிதாபிமான நெருக்கடிகளுக்கு தீர்வுகான முனைப்புகள்

இலங்கை அரசாங்கத்தின் வேண்டு கோளுக்கு அமைவாக வன்னியில் செயற் பட்டு வந்த அனைத்து மனிதாபிமான அமைப்புகளும் வவுனியாவிற்கு தமது செயல்பாடுகளை நகர்த்தியுள்ளன. இதன் காரணமாக வன்னிப்பிராந்தியத்தில் ஏற்பட் டுள்ள மனிதாபிமான பணிகளுக்கான இடைவெளிகளை குறைப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத் துள்ளது. இடம்பெயர்ந்து வாழும் மக்க ளுக்கு உணவுப் பொருட்கள் அதிகளவில் தேவையாகவுள்ள இந்தக் காலகட்டத்தில் அம்மக்களுக்கு வவுனியா ஊடாக உணவுப் பொருட்களை அனுப்பி வைப்பதற்கான நட வடிக்கைகளை இலங்கை அரசு மேற் கொண்டு வருகிறது. இது குறித்து இராணு வப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணய கார கருத்து வெளியிடுகையில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் அப்பகுதிகளில் உணவுக்கான தட்டுப்பாடு இல்லை என்று கூறியுள்ளதாக வும் அரசாங்கம் வன்னிக்கு உணவுப் பொருட்களை தொடர்ச்சியாக அனுப்பி வருவதாகவும் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர்களின் வேண்டு கோள்களுக்கு அமைவாக அவர்களுக்கு தேவைப்படும் உணவுப் பொருட்கள் ஒமந்தை சோதனைச் சாவடி ஊடாக தின மும் அனுப்பி வைக்கப்படுவதாக இராணு வப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

உலக உணவு ஸ்தாபனம் வழங்கியுள்ள சுமார் 5000 மெற்றிக் தொன் அளவிலான உணவுப் பொருட்கள் வவுனியாவில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தேவை அடிப்படையில் உணவுப் பொருட் களை வன்னிக்கு அனுப்புவதற்கான நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வும் அவர் கூறினார்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்ட மக்க ளுக்குத் தேவையான மருத்துவ வசதிகளை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலை வழங்கி வருகிறது.

கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தியிடம் வைத்தியசாலையின் செயல்பாடுகள் பற்றி கேட்ட போது தமது மருத்துவமனையின் தேவைகளுக்கு ஏற்ற வகையில் மருந்துகள் கையிருப்பில் உள்ளதாகக் குறிப்பிட்டார்.



வன்னியில் இடம்பெயர்ந்துள்ள குடும்பம் பொது இடமொன்றில் சமையலில் ஈடுபட்டிருப்பதை படத்தில் காணலாம்.

இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு வவுனியா ஊடாக உணவுப் பொருட்களை அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொண்டு வருகிறது

இடம்பெயர்வுகளால் அதிகளவு சுவாச நோய்கள் மக்களுக்கு ஏற்பட்டு வருவதாக வும் இதற்கான சிகிச்சைகளுக்காகவே பெருமளவான (3ஆம் பக்கம் பார்க்க)



மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது சூரியன் எப்.எம். வானொலி ஊடாக சனிக்கிழமைகளில் காலை 6.00 முதல் 8.00மணி வரையும் கிழக்கு மாகாணத்தில் பிறை எப்.எம். வானொலி ஊடாக (FM 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 1.30மணி முதல் 2.00மணி வரையும் புத்தளம் பிரதேசத்தில் அதர் எப்.எம். ஊடாக ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 6.45 முதல் 7.15 மணி வரையும் எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை www.radio.voicesofpeace.lk என்ற இணையத் தளத்திலும் கேட்கலாம்.

சுருக்கம்

✱ அரசாங்க அதிபர்களின் தகவல்களின் அடிப் படையில் திரட்டப்பட்ட IASC 144ஆவது அறிக் கையின் படி இலங்கையில் 55,600 குடும்பங்களைச் சேர்ந்த 301,538 பேர் அகதிகளாக இடம் பெயர்ந்த நிலையில் உள்ளனர்.

✱ வன்னியிலிருந்து சிறார்கள் வவுனியா நோக்கி இடம்பெயர்கின்றபோது அவர்களுக்குரிய கல்வி நடவடிக்கை, சுகாதாரம் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளை எவ்வாறு செய்து கொடுப்பது தொடர் பாக UNICEF, வவுனியா அரச செயலகம், வவு னியா மாவட்டத்தில் இருக்கின்ற அரசசாரா தொண்டு நிறுவனங்கள், உள்ளூர் தொண்டு நிறு வனங்களுக்கிடையில் வவுனியா அரச செயலகத் தின் கேட்போர்கூட மண்டபத் தில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அரச செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

✱ வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தி லிருந்து இடம்பெயர்ந்து கடந்த 18 வருடங்களுக் கும் மேலாக அகதிகளாக வாழும் குடும்பங்களை மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் துரிதப் படுத்தப்பட்டிருக்கின்றன.

இதன்படி மீளக்குடியமர விரும்பும் குடும்பங்கள் தமது காணிகள் தொடர்பான உறுதிகளைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் அதிகள விலான குடும்பங்கள் ஆவணங்கள் எதனையும் சமர்ப்பிக்க முடியாத நிலையில் உள்ளன. இடம் பெயர்வின் காரணமாகப் பலர் தமது ஆவணங்களைத் தவறவிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் இவர்களுக்கு ஆவணங்களைப் பெற் றுக்கொடுக்க இலவச உதவி சட்ட மையம் முன்வந்திருக்கின்றது. இதற்கான அறிவித்தல்களை அம் மையம் பொதுமக்களுக்கு உள்ளூர் ஊடகங்கள் மூலம் விடுத்திருக்கின்றது.



பேசும் படம்



புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள மதீனாநகர் நலன்புரி முகாமில் கேரம் விளையாட்டில் ஈடுபட்டுள்ள சிறுவர் களையும் இளைஞர் ஒருவரையும் பட த்தில் காணலாம். முஸ்லிம்கள் சென்ற மாதத்தில் 30 நாட்கள் தொடர்ச்சியாக நோன்பு நோற்று பின்னர் பெருநாளைக் கொண்டாடினர். சிறுவர்கள் முதல் வளர்ந்த தோர் வரை தவறாமல் நோன்பு நோற்பது குறிப்பிடத்தக்கது.

மீண்டும் வாழ்வோம்

'மீண்டும் வாழ்வோம்' திட்டமானது இலங்கையின் அரசாங்க சூழ்நிலைகளி னால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள்குடி யேறி உள்ளவர்களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்துபட்ட மனிதாபிமான செயற்றிட்ட அமைப்புக் களின் ஓர் அங்கமாகும்.

இயற்கை வளத்தை சீண்டும் இரசாயனம்

அனைத்து உயிரினங்களும் உயிர் வாழ் வதற்கு குடிநீர் அத்தியாவசியப் பொருளா கின்றது. குடிநீர் மாசடைந்தால் உயிரினங்க ளின் நிலையென்னவாகும் என்பதைக் கற் பனை செய்து பார்த்தோமானால் நினைத் துக்கூடப்பார்க்க முடியாத அவலங்கள் எம் கண்முன் விரிகின்றன. அத்தகைய ஒரு கொடூர நிலைமைக்கு புத்தளம் கற்பிட்டி வாழ் மக்கள் இன்று ஆளாகியிருப்பது கவ லைக்குரிய விடயமே.

குடிநீரே அவர்களுக்கு விஷமாக மாறி விட்டது. கிணற்றுத் தண்ணீரையே பருகி உயிர்வாழும் கற்பிட்டி மக்கள் தமது குடி நீர் ஒரு சில நாட்களிலேயே நிறம் மாறி செந்நிற புழுக்கள் மிதப்பதைக் கண்டு செய்வதறியாத நிலையில் இருக்கின்றனர்.

இதற்கான காரணம் என்னவாக இருக்குமென அறிய முற்பட்டபோது நிலக்கீழ் தண்ணீருடன் மலக்கழிவுகள் கலந்துள்ளமை பல ஆய்வுகளையடுத்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அது மட்டு மன்றி வேறு சில வகைகளிலும் நீர் மாச டைந்துள்ளது.

புத்தளம் மாவட்டம் DL3 என்ற கால நிலை வலயத்தின்கீழ் அமைந்துள்ளது. புத்தளம் வாழ் மக்கள் மட்டுமல்லாமல் பொதுவாக அனைவருமே நிலக்கீழ் நீரைத் தான் பாவனைக்கு எடுத்துக்கொள்வதுடன் குடிநீராகவும் பயன்படுத்துகின்றோம். தொடர்ச்சியாக அவ்வாறு நீரைப் பயன் படுத்தும்போது ஏற்படும் குடிநீர் இடை வெளியை கடல் நீர் புகுந்து நிரப்பி வரு வதைக் காணக்கூடியதாக இருப்பதாக புத் தளம் கற்பிட்டி பிரதேச சுற்றாடல் அலு வலர் எம்.ஏ.சி ரபீக் குறிப்பிட்டுள்ளார்.

பயிர்ச்செய்கைகளின் போது அதிக இலாபம் கருதியோ என்னவோ அளவுக் கதிகமாக யூரியா என்ற இரசாயனப் பசளையை பாவிக்கின்றார்கள். பெருகி வரும் மக்கட்தொகைக்கேற்ப இருப்பிடங் களுக்கான கேள்வி எழுந்துள்ளது. இருப் பிடப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய மனிதன் கையாளும் யுத்திகளில் ஒன்று தான் கடற்கரையை அண்டிய பகுதிகளை ஆக்கிரமிப்பது. இதன் காரணமாக கடற் கரையோரங்களில் உள்ள நீர்த்தாளை களை அழித்து வருகின்றனர். மேற்கூறிய காரணங்கள் கூட நீர் மாசடைவதற்கான பிர தான காரணங்களாக கருதப்படுகின் றன.



அசுத்த நீரை அருந்தியதால் பற்சிதைவுக்கு உள்ளான குழந்தை

அண்மையில் கற்பிட்டியிலுள்ள பெண் கள் மத்தியில் நடத்தப்பட்ட ஆய்வில் அதி கமான கருச்சிதைவு ஏற்படுகின்றது என்ற திடுக்கிடும் தகவலும் வெளியாகியுள்ளது. இந்தக்கருச்சிதைவுக்கு நீரில் அளவுக்கு அதிகமாக கலந்துள்ள நைட்ரேட் காரண மாக அமைந்துள்ளதாகக் கண்டறியப்பட் டுள்ளது. அத்தோடு இந்த குடிநீரைக் குடிக் கின்ற சிறுபிள்ளைகளுக்கு ஒட்சிசன் சரி யான முறையில் சென்றடையாத காரணத் தினால் சுவாசக் கோளாறு நோய் ஏற்பட்டு இறக்கின்றனர் என்பதும் ஓர் சகப்பான உண்மை. அத்தோடு இறந்த பிள்ளைக ளின் உடல்கள் 24 மணி நேரத்திற்கும் அதி கமாக வைக்கப்பட்டிந்தால் நீல நிறமாக மாறிவிடுவதும் ஆய்வில் உறுதிசெய்யப் பட்டுள்ளது. நீரில் காணப்படும் புளோ ரைட்டின் அளவு அதிகமாக காணப்படு கின்றமையினால் பற்கள் சிதைவடைவது டன் முகங்களும் விகாரமடைவதாக ஆய் வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மாசடைதலைத் தவிர்ப்பதற்கு பாடசாலை மட்டங்களில் முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாக கற்பிட்டிப் பிரதேச சுற்றாடல் அலுவலர் எம்.ஏ.சி.ரபீக் தெரி வித்துள்ளார். பாடசாலைகளில் மூன்று வகையான திட்டங்களை அறிமுகப்படுத் தியுள்ளோம். முதலாவது இந்த பிரதேசங் களிலுள்ள உயிரினங்களைப் பாதுகாப் பதற்கான ஒரு திட்டமும் அடுத்தது ஒவ் வொரு மாணவருக்கும் இரண்டு மரக்கன் றுகள் வீதம் வழங்கி பாடசாலைகளில் தாவரங்களின் எண்ணிக்கையை அதிகரித் தல் பிரதேசத்தில் காணப்படுகின்ற அதி கூடிய பசளைகளைப் பாவிக்கும் முறை யைத் தவிர்ப்பதற்கு கூட்டுப்பசளை தவிர் ப்பதற்கான செயற்பாடொன்றையும் நாம் முன்னெடுத்து வருகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இயற்கையை நாம் பாதுகாத்தால் மட்டுமே அது நமக்கு சாதகமாக இருக்கும் இல்லை யேல் அதுவே பாதகமாக அமைந்து பேரழிவைத் தேடித்தந்துவிடும். எமது சூழ் லில் உள்ள இயற்கை வளங்களைப் பாது காப்பதில் ஒவ்வொருவருக்குமே பங்கு உண்டு என்பதை மறந்துவிடக் கூடாது.

சுகாதாரம்

ஆரம்ப காலம் முதல் பல்வேறு முரண்பாடுகளால் நாடுகளுக் கிடையேயும், உள்நாட்டுக்குள் ளேயும் போர்கள் வெடித்து உயிர் களையும் உடமைகளையும் அபி விருத்தியையும் பாதித்துள்ளது இவ்வழிவுகள் தடுக்கப்பட வேண் டுமாயின் புரிந்துணர்வுடன் ஏற் படும் சமாதானமே நல்ல தீர்வாக அமையும் என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாக உல கம் ஏற்றுக்கொண்டுள் ளது.

எனவே உலகின் சமா தானத்தை நோக்கிய செயற் பாடுகளை ஊக்குவிக்கும் விதத்தில் செப்டெம்பர் 21ஆம் திகதி சர்வதேச சமா தான தினமாக நினைவு கூறப்படுகின்றது. இத்தினம் இலங்கை மக்களிடையே எவ்வாறு முக்கியத்துவம் பெறுகிறது என கொழும்பு கிருலப்பனை பகுதியில் உள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்க ளைச் சந்தித்து கேட்டோம்

நபர் 1: சமாதான தினம் பற்றி பெரிதாக ஒன்றும் தெரியாது. வீட்டு வேலைகள் இருப்பதால் மற்ற விஷயங்களில் கவனம் செலுத்துவது குறைவு. செய்திக ளில் கொஞ்சம் கேட்டேன். இந் நாட்களில் ஒரு வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பதால் கொஞ்சம் வேலைப்பளு அதிகம். கட்டாயம் இது தேவை, ஏனென் றால் இன்று எந்த நாட்டை எடுத் துக்கொண்டா லும் யுத்தம் நடை பெற்றுக்கொண் டிருக்கிறது. மக்கள் சமாதானத் தைப் பற்றி உணர்வதற்கும் ஒற்று மையாக வாழ்வதற்கும் இது தேவைப்படுகிறது.



நபர் 2: நாட்டிற்கு சமாதானம் மிகவும் தேவை. எல்லாப் பக்க மும் யுத்தம் நடைபெற்றுக் கொண் டிருக்கிறது. ரோட்டில் நடப் பதற்கே பயமாக இருக்கிறது. எனவே இலங்கை போன்ற நாட் டிற்கு முக்கியமாக இந்த சமாதான தினம் தேவை.

நபர் 3: நான் வெளிநாட் டில் தொழில் செய்தேன். தற்போதுதான் நாட்டிற்கு திரும்பியுள்ளேன். நாட்டில் யுத்தம் இல்லாமல் அனை வரும் சமாதானத்துடன் இருக்க வேண்டும் என விரும்புகிறேன்.

நபர் 4: பத்திரிகை மூலம் இதை அறிந்துகொண் டேன். இப்படி ஒரு நாள் இலங்கை யைப் பொருத்த மட்டில் அவசியமாகிறது. ஏனென்றால் நாடு இருக்கும் நிலையில் இது ஒரு பெரிய விஷயம். இதன் மூல மாக சமூகத்தைத் தெளிவுபடுத்தி அச்சமூகத்தின் மூலமாக சமா தானத்தை ஏற்படுத்தலாம்.

வாழ்வின் வர்ணங்கள்

திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள கலாசார மண்டபத்தில் வசிக்கும் அருமைநாதன் சஞ்சிதா, புனித சவேரியர் பாடசாலையில் தரம் 7 ஆம் ஆண்டில் கல்வி கற்று வருகின்றார். சம்பூரை சொந்த இடமாகக் கொண்ட இவர் உள்நாட்டு பிரச்சினை கள் காரணமாக இடம் பெயர்ந்து கலாசார மண்டபம் நலன்புரி நிலையத்தில் வசித்து வருகி றார். இவர் எழுதிய கவிதை வாழ்வின் வர்ணங்களில் இடம்பெறுகிறது.



கடலின் பரப்போ
மக்களின் எண்ணிக்கை
இந்த எண்ணிக்கைக்கு
வந்ததோ துயரம்
இந்தத் துயரமே எம் மக்களின் அவலம்
இது கொடூரமே தவிர இன்பம் அல்ல !
துன்பத்திலே மூழ்கியதே மானம்
மனித உதவியெங்கே மானிடப் பலமெங்கே?
இதுவா மனித வாழ்வு?
இந்த வாழ்வுக்கு ஏன் சோதனை?
இச்சோதனைக்கு ஓர்
விடிவு காலம் வரட்டும்
விடிவு காலமே எமக்குப் பயன் தரட்டும்
தீர்வுக்கு யார் துணை?
கடவுளா? அல்லது மானிடரா?
இந்தயரமே எம் நலன்புரி நிலைய
மக்களின் அவல நிலை!
இனியாவது மக்களின் அவலத்திற்கு
ஓர் தீர்வு வரட்டும்!

(01 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வன்னியிலிருந்து இடம் பெயரும் மக்கள் வவுனியா நோக்கி வரக் கூடும் என்ற எதிர்பார்ப்பில் வவுனியாவில் அம்மக்களுக்கான இடைத்தங்கல் முகாம்களை தயார் படுத்தும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மக்கள் தற்போது மருத்துவ மனைக்கு வருவதாகவும் அவர் கூறினார்.

தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டிய நோயாளர்கள் வவுனியா வைத்திய சாலைக்கு நோயாளர் காவு வாகனங்கள் மூலம் அனுப்பி வைக்கப்படுவதாகவும் வவுனியாவில் சிகிச்சை பெற்று திரும்பும் நோயாளர்களும் கிளிநொச்சி திரும்புவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தினசரி 3 நோயாளர் காவு வாகனங்கள் மூலம் நோயாளிகளை ஓமந்தை சோதனைச் சாவடிக்கு அனுப்பி வருவதாகவும் அங்கு மாற்று வாகனங்கள் மூலம் வவுனியா வைத்தியசாலைக்கு அவர்கள் கொண்டு செல்லப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கையின் மூலம் தினமும் 50 நோயாளர்கள் வரையில் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப் படுவதாக சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இதேவேளை வன்னியிலிருந்து இடம் பெயரும் மக்கள் வவுனியா நோக்கி வரக் கூடும் என்ற எதிர்பார்ப்பில் வவுனியாவில் அம்மக்களுக்கான இடைத்தங்கல் முகாம்களைத் தயார்படுத்தும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வன்னியில் இருந்து வவுனியா நோக்கி இடம்பெயரும் மக்களுக்கு அவர்களது அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்குரிய ஏற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னனெடுக்கப்பட்டு வருவதாக வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சார்ளஸ் கூறியுள்ளார்.

இடைத்தங்கல் முகாம்களைத் தயார் செய்வதில் தாங்கள் ஈடுபட்டுள்ளதாகவும் அதே நேரத்தில் அவர்கள் தொடர்ந்து தங்குவதற்கான தெரிவு செய்யப்பட்டுள்ள 3 இடங்களும் தயார்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிறுவனங்களுடன் சேர்ந்து அரச திணைக்களங்களின் தலைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ள உப குழுக்கள் அவசரகாலத் திட்ட வரைவுகளைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் மேலதிக அரசாங்க அதிபர் கூறினார்.

மீளத்திரும்பும் ஆசைகள்

ஒக்டோபர் மாதத்துடன் வடக்கில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப் பட்டு 18 ஆண்டுகள்

இடம்பெயர்வுகள் மனித இனத்தில் அளவிடமுடியாத அதிர்வுகளை ஏற்படுத்தி வருகின்றது.

சொந்த மண்ணை விட்டு வெளியேறு தல் உயிர்பிரியும் சோகத்தை போன்றது.



இடம்பெயர்ந்து பல ஆண்டுகளாக அகதிகள் என்ற நாமம் சுமந்து வாழும் இந்த மக்களின் சோகங்கள் சொன்னால் புரியாதவை.

வடமாகாணத்திலிருந்து 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த 18,500 குடும் பங்களைச் சேர்ந்த மக்கள் புத்தளம் மாவட்டத்தில் உள்ள 141 நலன்புரி நிலை யங்களில் வசித்து வருகின்றனர். இவர் கள் இடம்பெயர்ந்து 18 வருட பூர்த்தி ஒக் டோபர் 23ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை நினைவுகூரப்படவுள்ளது. பதினெட்டு வருட அகதி வாழ்வை நிறைவு செய்துள்ள அம்மக்கள், தமது சொந்த ஊரின் மண் வாசனை இன்னும் தம் நினைவுகளிலிருந்து நீங்கவில்லை என்கின்றனர்.

எங்கிருந்தாலும் எம் சொந்த இடத்தில் வாழ்வது போன்ற மகிழ்ச்சி தமக்கு ஒருபோதும் ஏற்படாது என புத்தளம் மதீனா நகர் நலன்புரி நிலையத்தில் வசிக்கும் இப்ராகிம் நாகூரான் கூறினார்.


தாங்கள் இடம்பெயர்ந்து தங்கி வாழும் இந்த பிரதேசத்தை தமது சொந்த இடமாகக் கருத முடியவில்லை என்று அவர் குறிப்பிடுகின்றார்.

தமது உறவுகள் பலரையும் இழந்து அங்கு அகதிமுகாம் வாழ்க்கையைத் தொடர்வதாகவும் எனினும் தமது சொந்த இடத்திற்கு சென்று அங்கிருக்கின்ற வளங்களைக் கொண்டு தமது வாழ்க்கையைத் தொடர வேண்டும் என்றும் அதன் மூலமே தமது வாழ்வில் மகிழ்ச்சி ஏற்படும் என்றும் இப்ராகீம் தெரிவித்தார்

நலன்புரி நிலையத்தில் வாழ்கின்ற அநேகமானோர் கூலித்தொழில்களை செய்து தமது வாழ்க்கையை கொண்டு நடத்துகின்றனர். இருப்பினும் சிலர் ஆரம்பத்தை விட தற்போது பொருளாதார ரீதியாக முன்னேறியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

புத்தளம் மாவட்டத்தில் வளப்பற்றாக்குறை நிலவுகின்றது, இங்கு காண்படும் குறைந்த பட்ச வளங்களை இடம்பெயர்ந்த மக்களும் நிரந்தர குடியிருப்பாளர்களும் பயன்படுத்த முற்படும் போது சில முரண்பாடுகள் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் பல்வேறு தரப்பினரும் மேற்கொண்ட சமரச முயற்சிகளால் உள்ளூர் மக்களுக்கும் இடம்பெயர்ந்த மக்களுக்கும் இடையிலான உறவு நிலை



புத்தளம் வாழ் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள அகதிமுகாம்

தற்போது சுமுகமடைந்துள்ளதாக புத்தளத்தில் வாழ்ந்து வரும் முல்லைத்தீவைச் சேர்ந்த மொஹமட் ரிஷ்மி தெரிவித்தார்.

ஏனைய பிரதேசங்களில் இடம்பெயர்ந்த மற்றும் உள்ளூர் மக்களுக்கிடையில் பாரியளவிலான பிரச்சினைகள் தொடர்வதை காணமுடிவதாகவும் எனினும் புத்தளம் பிரதேச மக்களைப் பொறுத்தவரை அவ்வாறான பாரிய பிரச்சினைகள் ஏற்படவில்லை என்றும் கூறினார்.

வடமாகணத்தில் வாழ்ந்த காலத்தில் முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களோடு நல்ல உறவுகளை பேணி வந்திருக்கின்றனர். எனவே மீண்டும் சொந்த இடங்களுக்குச் சென்று தமது பழைய உறவுகளைப் பேணுவது இம்மக்களுக்கு கடினமான காரியமல்ல.

ஒவ்வொரு வருடமும் தாங்கள் இடம்பெயர்ந்ததை தாங்களே நினைவு கூர்ந்து கொண்டிருப்பதாகவும் எனினும் தமது வேதனைகளும் சொந்த இடங்களுக்கு திரும்ப வேண்டும் என்ற எதிர்பார்ப்புகளும் சம்பந்தப்பட்ட தரப்பினரை சென்றடைகின்றதா என்பது கேள்விக்குறியாகவே இருப்பதாகவும் அந்த மக்கள் ஏக்கம் வெளியிடுகின்றனர்.

இதேவேளை இதுவரை காலமும் அம்மக்கள் மீள்குடியேற்றப்படாததற்கான காரணம் குறித்து வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்கான செயலகத்தின் உதவி ஆணையாளரிடம் கேட்டபோது அரசாங்கம் அவர்களுக்கான பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்கும் போதே இந்த மக்களின் மீள்குடியேற்ற முயற்சிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் தமது சொந்த தாயகத்தில் அவர்கள் மீளக்குடியேறி சுயநிர்ணய உரிமையுடன் வாழவேண்டும் என்பதையே தாங்களும் விரும்புவதாக அவர் கூறினார்.

இது சாவூல் ஹமீத் அப்துல் மதீனின் தனிப்பட்ட விருப்போ அல்லது புத்தளம் வாழ் இடம்பெயர் மக்களின் விருப்போ மட்டுமல்ல இந்நாட்டின் முன்னேற்றத்தை யும் மக்களின் ஒளிமய வாழ்வையும் விரும்பும் பல நல்ல உள்ளங்களின் பிரார்த்தனையும் அதுவாகவே உள்ளது.

விவசாயிகளை மிரட்டும் எலிக் காய்ச்சல்






வயல் பிரதேசங்களில் தொழில் புரியும் விவசாயிகள் எதிர்நோக் கும் மிகப்பெரிய நோயாக எலிக் காய்ச்சல் காணப்படுகிறது. இலங் கையில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, மாத்தளை, கண்டி, குருநாகல், மாத்தறை, கேகாலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட் டங்களில் இந்நோயினால் பாதிக் கப்பட்டவர்கள் இருப்பதாக அறிய வருகிறது. இவ்வருடம் ஜனவரி முதல் ஆகஸ்ட் வரையி லான காலப்பகுதியில் 3,825 பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டி ருப்பதாகவும் அதில் 117 பேர் மரணித்துள்ள தாகவும் பத்தி ரிகை ஒன்று செய்தி வெளி யிட்டுள்ளது. இந்நோய் பற் றிய பூரண விப ரங்களையும் முன்னெச் சரிக்கை விட யங்களையும் அறிந்து கொள்ள மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய தொற்று நோய் தடுப்புவியலாளர் வைத்திய கலாநிதி சின்னத்தம்பி தட்சிணா மூர்த்தியை நேர் கண்டுள்ளோம்.

எலிக் காய்ச்சல் என்றால் என்ன?

எலிக் காய்ச்சல் என்பது லெப் டோபைரோசிஸ் என ஆங்கிலத் தில் அழைக்கப்படுகிறது. இது ஒரு வகை பக்டீரியாவினால் பரப் பப்படுகின்றது. பொதுவாக எலி யின் சிறுநீரிலிருந்து தான் இந்தக் கிருமிகள் வெளியேறுகின்றன. ஆனாலும் எலியைத் தவிர ஆடு, மாடு, நாய், பன்றி, பூனை ஆகிய வற்றின் சிறுநீரிலும் இந்தக் கிருமி காணப்படுகின்றது. இந்தக் கிருமி கள் நீர் நிலைகளில் வசிக்கக்கூடி யவை. கிருமித் தொற்றுள்ள நீரை அருந்தும்போதோ, நீர் நிலைக ளில் நடமாடும்போது பாதங்க ளின் மூலமாக துளைத்துக் கொண்டு உட்செல்லக் கூடியது. அல்லது புண்கள் இருப்பின் அவை மூலமாக இரத்த ஓட்டத்தை சென்றடையும். குருதியிலிருந்து கொண்டு உடலின் பல்வேறு அங் கங்களிலும் தாக்கத்தை ஏற்படுத் தக் கூடியது. பொதுவாக ஈரல், சிறு நீரகம், மூளை போன்றவற்றில் தாக்கங்களை ஏற்படுத்தும். இத் தாக்கத்தினால் நடுக்கத்துடன் கூடிய காய்ச்சல், தசை நோ, தலை வலி, கண் மஞ்சளாதல், கண்களில் ஒவ்வாமை போன்ற பிரச்சினை கள் வரக்கூடும்.

எலிக்காய்ச்சலுக்குரிய காரணி களுக்கும் நோய்கள் உருவாவ தற்கும் இடையிலான கால அளவு எவ்வளவு?



நோய்த்தொற்று ஏற்பட்டு 10 நாட்களுக்குள் இந்நோய்த் தாக்கம் காணப்படும். இரத்த மாதிரிகளை எடுத்து ஆராய்ச்சி நிலையங்க ளுக்கு அனுப்பி அறிக்கை பெற்ற பின்னர்தான் இந் நோயினை உறுதிப்படுத்துகின்றோம். நாங்கள் அவ்வாறு நடவடிக்கை மேற் கொண்டதில் சிலருக்கு எலிக் காய்ச்சல் இருப்பதை உறுதிப்படுத் தியிருக்கின்றோம். வயல் வேலை களில் ஈடுபடுகின்றவர்கள், கரும் புத் தோட்டங்களில் ஈடுபடுகிறவர் கள்தான் அதிகமாக இந்நோயால் பாதிக்கப்படுகின் றார்கள்.

இலங்கையில் இந்நோயின் தாக்கம் எவ்வாறு உள்ளது?

அம்பாறை மாவட்டத்தில் அட் டப்பிள்ளவன் என்கின்ற இடத்தில் வேலை நிமித்தம் சென்றிருந்த சிலர் அங்குள்ள குளத்தில் நீர் அருந்தியதன் காரணமாக நோய் வாய்ப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள். இந் நோயின் தாக்கத்தால் அதில் ஒரு வர் இறந்திருக்கின்றார். இது தவிர கிளிவெட்டிப் பகுதியில் வயல் வேலைகளில் ஈடுபடுகின்ற சிலர் இந்நோய்த்தாக்கத்திற்கு உட்பட் டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் அவர்களுடைய இரத்த மாதிரிகளை இரத்த பரிசோதனைக் காக அனுப்பி வைத்திருக்கின் றோம். இது குறித்து அறிக்கை இன்னும் கிடைக்கப்பெறவில்லை. இலங்கையில் இந்நோய்த் தாக்கத் திற்கான சந்தர்ப்பங்கள் குறைவாக வுள்ள போதிலும் இந்நோய் இல்லை என்று குறிப்பிட முடியாது.

எலிக்காய்ச்சலுக்குரிய அறி குறியையும் ஏனைய நோய் களுக்குரிய அறிகுறியை யும் எவ்வாறு வேறுபடுத்த லாம்?

காய்ச்சலு டன் கூடிய தலையிடி காணப்படும். தசைகள் கடு மையான நோவினைக் கொடுக்கும். கண் மஞ்சள் நிறமாகி கண்ணில் ஒவ்வாமை ஏற்படும். இந்த அறிகுறிகளைக் கொண்டு தான் நோயினைக் கண்டுபிடிக்கின் றோம். சில வேளைகளில் சிறு நீரகக் கோளாறுகள் ஏற்பட்டு சிறுநீரகம் செயலிழந்து போகக் கூடும். அதே நேரத்தில் மூளை, ஈரல் போன்ற வையும் தாக்கப் படக்கூடும். இதனால் தான் இறப்பு ஏற்படுகிறது.


விவசாயிகளுக்கும் ஏனையோ ருக்கும் எத்தகைய முன்னெச் சரிக்கை நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று நீங்கள் ஆலோசனை கூறுகின் றீர்கள்?

முன்னெச்சரிக்கையாக வயல் வேலை செய்பவர்களுக்கு டொக்சிசைக்ளைன் எனப்படு கின்ற மாத்திரையை வழங்குகின் றோம். இது ஓரளவுக்கு பாதுகாப்பு அளிக்கக் கூடியது. இருந்தாலும் மேற்கூறப்பட்ட நோய்க்குறிகள் காணப்படுமிடத்து உடனடியாக சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். இல்லாவிடில் அது பிரச்சினையில் முடியக்கூடும்.

உங்கள் கதைகள்

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் இடம்பெறக் காத்திருக்கின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒலி பரப்பாகும் நாடகங்களின் தொகுப்பை மீண்டும் வாழ்வோம் பத்தி ரிகை வாயிலாகவும் உங்களுக்கு அறியத் தருகின்றோம். வடக்கு கிழக்குப்பகுதிகளில் இருந்து பல்வேறு காரணங்களால் இடம் பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களின் மனநிலை குறித்து எடுத்துக் கூறும் வகையில் **'இழப்புகள்'** குறுநாடகம் அமைந் தது. குறுநாடகத்தின் தொகுப்பு கீழே தரப்படுகின்றது.

இழப்புகள்



மீண்டும் வாழ்வோம் நிகழ்சியின் உங்கள் கதைகள் பகுதியில் சமூகத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய விடயங்களை மக்களிடையே இலகுவாக சென்றடையக் கூடிய வகையில் குறு நாடகங்களை ஒலிபரப்புகின்றோம்.

இலங்கையில் நிலவும் யுத்த சூழ்நிலை காரணமாக இடம்பெயர்வுகளும் இழப்புக்களும் தொடர்ந்த வண்ணமே தான் உள்ளன. சொந்த நாட்டிற்குள்ளேயே அகதிகளாக வாழும் துர்ப்பாக்கிய நிலையில் எம் மக்கள் வாழ்கின்றார்கள். மறுபடியும் தமது சொந்த மண்ணிற்கு செல்ல முடியும் என்ற நம்பிக்கை பேச்சளவில் கூட எவரிடமும் இல்லை. பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த மண், உடன் பிறப்புக்கள், கூடி வாழ்ந்த சொந்தங்கள், உழைத்து சேர்த்த உடை மைகள் எல்லாவற்றையும் இழந்து உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி அகதி என்ற பெயரில் முகம் தெரியாத மனிதர்களுடன் முகாம்களிலும் நலன்புரி நிலையங்களிலும் வாழ்பவர்களில் பல பேர் நடைப்பிணங்களாகத்தான் வாழ்கிறார்கள். தமது என்று சொல்வதற்கு எதுவுமின்றி எல்லாவற்றிற்கும் மற்றவர்களை எதிர்பார்த்து வாழ்கிறார்கள். அவர்கள் மனங்களில் ஏற்பட்டிருக்கும் காயங்கள் ஆறாத வடுக்கள் ஆகிவிடுகின்றன. இன்னும் சிலர் சொந்த நாட்டை விட்டு அகதிகள் என்ற பெயரில் வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழ்கிறார்கள்

இந்தக் கதையில் வரும் பெரியவர் எல்லாவற்றையும் இழந்து தனது மகளுடன் அகதி முகாமில் வாழ்ந்து வருகிறார். அவருக்கு ஏற்பட்ட இழப்புக்களை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நேரத்திற்கு சாப்பிடாமல் எவருடனும் பேசாமல் மன வேதனையுடன் வாழ்க்கையில் பிடிப்பில்லாமல் இருக்கும் தந்தையைப் பார்த்து வேதனைப்படும் மகள் செல்வி. அவருடைய இந்த நிலைமைக்கு காரணம் மனைவியின் இழப்பு, சொந்தங்களை பிரிந்து வாழ்கிறார், சொந்த மண்ணை விட்டு வேறு ஒரு இடத்தில் அகதியாக வாழ்கிறார், நடந்து முடிந்த கசப்பான அனுபவங்கள் அவரை தினம் தினம் வாட்டுகிறது.

இவ்வாறான மனநிலையுடன் எத்தனையோ மனிதர்கள் வாழ்கிறார்கள். இவர்களுடன் பேசிப்பார்த்தால்தான் இழப்புகளின் பிரதிபலிப்பின் உண்மை நிலை மற்றவர்களுக்கும் விளங்கும். வயது வேறுபாடின்றி மனத்தாக்கங்களோடு வாழும் இம் மக்களுக்கு எவராலும் சமாதானம் கூற முடியாது. காரணம் மீளப்பெற்றுக் கொள்ள முடியாத வகையிலேயே இவர்களது இழப்புக்கள் காணப்படுகின்றன. இழப்புக்களால் மனிதர்களுக்கு ஏற்படும் வலிகளை இழப்புக்கள் வசம் அப்படாதவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதே இந்தக் கதையின் நோக்கமாகும்.

மீண்டும் வாழ்வோம் (LifeLine) செய்திட்டமானது USAID இனால் நிதியளிக்கப்பட்டு Internews Network இனால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது

INTERNEWS

USAID FROM THE AMERICAN PEOPLE

மீண்டும் வாழ்வோம் நிகழ்சியில் உங்கள் கதைகள் பகுதிக்கு உங்கள் வாழ்க்கையில் இடம்பெற்ற சம்பவங்களை எழுதி அனுப்புங்கள். இவற்றை நாடக வடிவில் தொகுத்து உங்கள் கதைகளாக ஒலிபரப்பக் காத்திருக்கின்றோம். உங்கள் கதைகள் மற்றவர்களுக்கும் படிப்பினையாக அமையும் என்பதே மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியின் எதிர்பார்ப்பாகும்.

இப்பத்திரிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185 ஆம் இலக்கத்தில் 2008ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 05 ஆம் திகதி ஞாயிறுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.